இந்த கோரிக்கையைப் பரிசீலனை செய்தபிறகு அரசு கீழ்க்கண்ட நிதி உதவிகளை மட்டும் அளிக்க அண்மையில் ஆணையிட்டுள்ளது :—

(1) மூன்று பேருந்துகள் வாங்குவதற்காக வட்டியுடன் நீண்டகால கடன் ரூ. 1,90,000.

(2) அரசின் பங்குத்தொகை ரூ. 10,000.

(3) நிறுவனத்தின் செயலாளராகப் பணி புரிய அரசுப் பொறுப்பில் ஒரு கூட்டுறவு துணைப் பதிவாளரின் சேவை (ஓராண்டு காலத்திற்கு).

## பள்ளிப்பட்டு துணை வட்டத்தில் அரிசனக் குடியிருப்பு

*513 வினா—திரு. இ. எஸ். தியாகராசன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு துணை வட்டத்தில் உள்ள வெளி அகரம் அரிசனக் குடியிருப்பைச் சேர்ந்த அரிசனங்களுக்கு 20 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு 1962–63-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், கட்டுமான வேலை முடிந்து விட்டதா ? கட்டட வேலை செய்தவர்களுக்குத் தொகை முழுவதும் கொடுக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. இ. எஸ். தியாகராசன்:** தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு துணை வட்டத்திலே உள்ள வெளி அகரத்திலே கட்டப்பட்ட அரிசனக் காலனிகள் குட்டிச்சுவராக இருந்துகொண்டிருக்கின்றன, அதன் காரணம் என்ன என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, ஏற்கனவே 1964-ஆம் ஆண்டிலே இந்தக் கிராமத்தில் 12 வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று தனியார் ஒருவருக்குக் கட்டுவதற்கு ஒப்பந்தங்கள் தரப்பட்டு இருந்தன, ஆனால் அவர் பாதியளவில் கட்டடங்கள் கட்டிவிட்டு பாதியில் நிறுத்தி விட்டுவிட்டார். ஆயிரம் ரூபாய் ஒரு வீட்டுக்கு நல இலாகா மூலமாகத் தரப்படவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டு இறுதியிலே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. 1966-ஆம் ஆண்டிலே பெய்த பெருமழை, புயலின் காரணமாக பாதியளவில் கட்டப்பட்டிருந்த வீடுகள் இடிந்துவிட்டன. இன்னும் அவற்றைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் எதுவும் செய்யவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, அரிசனக் காலனிகள் கட்டப்பட்டு இடையிலே பராமரிப்பு எதுவும் இல்லாத நிலைமையில் விடப் பட்டுவிடுகின்ற காரணத்தினால் பாழடைந்து விடுகின்றன, கட்டப்பட்டுக் கொடுத்தாலும் அவைகளைப் பராமரித்தால்தான் அவைகள் நீண்ட காலத்திற்கு நீடித்திருக்கும். எனவே கட்டப்பட்ட வீடுகள் எவை எவை பராமரிக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றன என்பதைக் கண்டறிய அரசு ஒரு குழுவை நியமித்து அப்படிப்பட்ட வீடுகளையெல்லாம் பழுதுபார்த்துக் கொடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, விடுகள் கட்டிக்கொடுப்பதற்கே பணம் போதவில்லை : கட்டிய பிறகு அவற்றைப் பராமரிப்பதற்கு அரசிடம் போதுமான பணம் இல்லை. விடுகள் இலவசமாகக் கட்டிக்கொடுக்கப்பட்டபிறகு அவற்றை அவர்கள்தான் பராமரித்துக்கொள்ள வேண்டும், அதிலே அவர்களுக்கும் பங்கு உண்டு. பழுதுபார்க்கின்ற வேலை அரசாங்கத்திற்கு இல்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, இந்த அரிசனக் காலனிகளில் விடுகள் கட்டுவதற்கான மொத்தத் தொகையும் கொடுத்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறதே, அப்படிக் கொடுத்து விட்டிருந்தும் அந்த வேலை முழுமை பெறவில்லையே அரசு அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, பரிசிலனை செய்யலாம்.

*Exemption from stamp duties*

* 514 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Government has agreed to exempt the Mortgage deeds executed in favour of L.I.C. from stamp duties; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU P. U. SHANMUGAM : (*a*) Exemption from payment of stamp duty has been granted in respect of the mortgage deeds executed by the policy holders in favour of Life Insurance Corporation of India who obtain loans upto Rs. 50,000 under " Own your Home " Scheme.

(*b*) Exemption has also been granted from tims to time during 1965-66 to 1971-72 in respect of the mortgage deeds executed by the Tamil Nadu Electricity Board whenever it took mortgage loans from the Life Insurance Corporation.

THIRU N. DENNIS : May I know from the Hon. Minister the extent of revenue loss to Government on account of this exemption?

THE HON. THIRU P. U. SHANMUGAM : I do not have the particulars here.

*Drinking water facilities in drought areas*

* 515 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state?

(*a*) whether it is a fact that the Government have allotted additional amount for Drinking Water facilities in the drought hit areas in this State; and

(*b*) if so, the details thereof?